
# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)

## 82



**Sri Sankar Publications**

**KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.**

ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வலம், சிலாபம் ஸ்ரீலங்கா.

**Author - B.S.Sarma**

**October 2014** ஒக்டோபர் (புரட்டாசி- ஐப்பசி)

## Editorial.

Many readers of 'Path to Darma', the periodical published, by Kshethra Vinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, are very happy that the opinion section is opened to convey their views on the matter that are published in this monthly magazine.

Varied ranges of views are expressed on the standard of the publications, out of which only a few selected analysis are published due to the lack of space.

The principal venture of this publication is to impart understanding pertaining to Hinduism basically by answers to the doubts raised by the concerned readers. As mentioned earlier these issues are distributed freely.

Taking into consideration the deviation of the talents and standard of awareness in this subject of the readers, the subject matter treated here is not too deep or just superficial.

I am very much thankful to the readers of 'Path to Darma', periodical, who are giving me enormous advise and encouragement in bringing out this issues.

B.S.Sarma,
Kshethra Vinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka. October.2014


## Suggestions from the readers

Dear Mr.B.S.Sarma,

Editor, 'Path to Darma',

It is once again my proud privilege to go through the attachment namely 'Path to Dharma' You are really serving a great deal to all Hindu population who are interested in knowing our early and well defined cultural-religious system of the world.
I have been requesting you to get me the translation of the Sivasahasranama valihi commencing with
Aum Sivaya namaha ,Aum Haraya namaha Aum Mridaya namaha……….
With kind regards,
A.J.Prakash, Canada. 6th Sept.2014





**Quatations**

"To Rudra,Lord of sacrifice,of hymns and balmy medicines,we pray for joy, health and strength.He shines in splendor like the sun,refulgent as bright gold is He,the good,the best amoung the Gods".

Rig Veda

"Instill in us a wholesome,happy mind,with goodwill and understanding.Then shall we ever delight in your friendship like cows who gladly rejoice in meadows green.This is my joyful message".

Rig Veda

"He the Self is not this.He is ungraspable,for He is not grasped.He is indestructible,for He cannot be destroyed,He is unattached,for He does not cling to anything.He is unbound,He does not suffer,nor is He injured".

Yajur Veda

"Gods is,in truth,the whole universe;what was,what is and what beyond shall ever be.He is the God of life immortal and of all life that lives by food.His hands and feet are everwhere.He has heads and mouths everywhere.He sees all.Hehears all.Heis is in all,ans He Is".

Yajur Veda

"Thia atman is the Lord of all beings,the King of all beings.Just as the spokes are fixed in the hub and the rim of a chariot wheel,in the same way all these beings,all the Gods,all the worlds,all life breaths,all these selves,are fixed in the atman".

Yajur Veda

"Aum.One should mediate on this syllable as the Udgitha chant,for every chant starts with Aum.Of this the explanation is as follows;The essence of all beings is the earth;the essence of the earth is water;the essence of water is plants;the essence of plants is man; the essence of man is speech; the essence of speech is the Rig Veda;the essence of Rig Veda is the Sama Veda; and the essence of the Sama Veda is the Udgitha chant".

Sama Veda

"As one not knowing that a golden treasure lies buried beneath his feet may walk over it again and again yet never find it-so all beings live every moment in the city of Brahman yet never find Him,because of the veil of illusion by which He is concealed".

Sama Veda

"He who knows the fine-drawn thread of which the creatures that we aee are spun,who knows the thread of that same thread- he also knows Brahman,the Ultimate".

Atharva Veda

"Sin of the mind,depart away!Why do you utter improper suggestions?Depart from the place!Ido not want you!Go to the trees and the forests!My mind will remain here along with our homes and our cattle".

Athava Veda

# சிவ பூஜைக் கிரியை முறை

உ
சிவமயம்

**விநாயகர் காப்பு**

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.**

**திருச்சிற்றம்பலம்**

**உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்இ**
**அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

பரமசிவனைப் பத்மாசனத்தில் எழுந்தருளச் செய்து ஆவாகனம், ஸ்தாபனம், சன்னிதானம் முதலியவற்றால் பூசித்து பின், தைலக்காப்புச் (தைலாப்பியகம்) செய்து, அரிசிமா, மஞ்சள்மா நெல்லிவற்றல்மா, அபிஷேகக்கூட்டு மாப்பொடி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், பால், தயிர், பழச்சாறுகள், நெய், தேன், இளநீர், கருப்பஞ்சாறு, விபூதி, சந்தனம், குங்குமம், சங்கு ஜலம், முதலியவற்றால் அபிஷேகஞ்செய்து வஸ்திரம் உபவீதங்களைத் தரிக்க வேண்டும். பின்னர் சந்தனம், குங்குமம், புஷ்பம், ஆபரணங்களால் அலங்கரித்துத் தூப, தீபம் சமர்ப்பித்து ஆவரணபூசை செய்து நைவேத்தியம், முகவாசம், தாம்பூலம் என்னுமிவற்றை அர்ப்பணித்துத் தூப ஆராத்திரிகம் செய்து, (1. குறிப்பு) பவித்திரம் சமர்ப்பித்து, பதினாறு உபசாரங்கள் செய்ய வேண்டும். பின் மீண்டும் பாத்தியம், சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் சமர்ப்பணம் செய்யவேண்டும். அதன் பின் ஜெபம், ஸ்தோத்திரம் நமஸ்காரம், பிரதக்ஷிணங்களைச்செய்து புஷ்பங்களால் நாமமந்திர அர்ச்சனைப் பூஜைசெய்ய வேண்டும். பின்னர் ஆவரண தேவதைகளுடன் சிவபெருமானை எழுந்தருளச்செய்து, நிவேதனஞ் செய்யவேண்டும்.

**பஞ்சகவ்வியம் செய்யும் முறை**

ஈஸ்வரனுடைய கிழக்குப் பாகத்தில் அல்லது ஈசானபாகத்திலாவது, ஒன்று அல்லது இரண்டு கைமுழ அளவு சதுரமாக கோமயத்தால் மெழுகி, கிழக்கு நுனியாகவும் வடக்கு நுனியாகவும் நான்கு நூல்களால் தனித்தனி ஒரு சாண் அளவுள்ள ஒன்பது கோஷ்டங்களைக்கீறி, ஒவ்வொரு கோஷ்டத்திலும், குருணியாவது, அதற்குப் பாதி அளவுள்ள

நெல்லையாவது, அதனினும் பாதி அளவுள்ள அரிசியையாவது, அல்லது தருப்பையையாவது பரப்பி, வடக்கு முகமாக இருந்துகொண்ட நான்கு திக்கிலும் வடக்கு நுனியாகவும் கிழக்கு நுனியாகவுமுள்ள ஐந்து தருப்பைகளைப் பரப்பி, நான்கு பக்கங்களிலும் புஷ்பங்களால் அலங்காரஞ்செய்யவேண்டும். பின்னர்,

சிவதத்துவாய நம:

சதாசிவதத்துவாயநம:

வித்தியாதத்துவாய நம:

புருஷதத்துவாய நம:

காலதத்துவாய நம:

பிருதிவி தத்துவாய நம:

ஜல தத்துவாய நம:

வாயு தத்துவாய நம:

பிரகிருதி தத்துவாய நம:

என்று சொல்லி நடு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு, ஆக்கினேயம், நிருதம், மாருதம், ஈசானம் என்னும் ஒன்பது கோஷ்டங்களைப் பூசித்து, சுவர்ணபாத்திரம், வெண்கலபாத்திரம், (அல்லது உடையாத, கருப்பு நிறமில்லாத மண் பாத்திரங்களையாவது சுத்தம் செய்து) ஒன்பது கோஷ்டங்களிலும் வைத்து

சுப்பிரதிஷ்டபாத்திராய நம:

சுசாந்தபாத்திராய நம:

தேஜோமயபாத்திராய நம:

ரத்தினோதகபாத்திராய நம:

அமிருதபாத்திராய நம:

வியக்தபாத்திராய நம:

சூரியபாத்திராய நம:

சம்யுக்தபாத்திராய நம:

அவ்வியக்தபாத்திராய நம:

என்று சொல்லி, மேலே கூறியவாறு கோஷ்ட முறையாகப் பாத்திரங்களைப் பூசித்து, தாம்பிர வர்ணமான பசுவின் **பாலை** மூன்று உழக்கு அளவு நடுப்பாத்திரத்திலும், வெண்மைவர்ணமான பசுவின் **தயிரை** இரண்டு உழக்கு அளவு கிழக்குப் பாத்திரத்திலும், கபிலவர்ணமான பசுவின் **நெய்யை** ஒரு உழக்கு அளவு தெற்குப் பாத்திரத்திலும், கருப்புவர்ணமான **கோமூத்திரத்தை** (பசுவின் சிறுநீரை) இரு அஞ்சலிகள் கொள்ளும் அளவு வடக்கு பாத்திரத்திலும்,கருப்புவர்ணமான **கோமய** (பசுவின் சாணம்)த்தை ஒரு உழக்கு அளவு எடுத்து ஐந்து உழக்கு நீர் சேர்த்து ஆடையினால் சுத்தி செய்து மேற்குப் பாத்திரத்திலும், விளாம்பழ அளவாவது அல்லது அதற்க்குப் பாதி அளவாவது, அல்லது அதனினும் பாதி அளவாவது, அரிசி, நெல்லிக்கனி ,மஞ்சளென்னுமிவைகளை அரைத்து எடுத்து ஆக்கினேயம், நிருதம், வாயு என்னும் மூலைகளிலுள்ள பாத்திரங்களிலும், முப்பத்தாறு, அல்லது இருபத்தைந்து, அல்லது பன்னிரண்டு தருப்பைகளைச் சேர்த்து நீரில் போட்டு,முப்பத்தாறு முதலாகக் கூறப்பட்ட அளவில் பாதியாகிய வேறு தருப்பைகளால் செய்யப்பட்டதாயும், பிரதக்ஷிணமாக வாயுதிக்கில் நின்று சுற்றப்பட்டதாயும், ஒரு கையளவாகவாவது, அல்லது ஒரு ஒட்டையளவாகவாவது உள்ளதாயும், இரண்டங்குல அளவுள்ள முடிச்சுடனும், நான்கு அங்குல அளவுள்ள நுனியுடனும் கூடின கூர்ச்சத்தைச் செய்து, அதை ஒரு மரக்கால் அளவுள்ளதும், சந்தனம், அறுகு என்னுமிவற்றுடன் கூடினதுமான நீரில் போட்டுக் குசோதகஞ் செய்து, ஈசானகோணத்தில் உள்ள பாத்திரத்தில் இருதய மந்திரத்தால் அந்த நீரை விட்டு, பால் முதல் கோமயம் வரையான பஞ்சகவ்வியங்களை முறையே ஐந்துமுறைகள், நான்கு முறைகள், மூன்றுமுறைகள், இரண்டுமுறைகள், ஒருமுறை ஈசானாதி மந்திரங்களாலும், அரிசிமாவை இருதயமந்திரங்களாலும், நெல்லிமாவை சிரோமந்திரத்தாலும், மஞ்சளை கவச மந்திரத்தாலும், குசோதகத்தை ஆறுமுறைகள் ஆவர்த்தி செய்த பஞ்சப் பிரம்ம மந்திரத்தாலும் அபிமந்திரணஞ் செய்ய வேண்டும்.

அதன்பின்னர், கோமயத்தைக் கோசலத்தில் சேர்க்கவேண்டும்; இவ்விரண்டையும் நெய்யில் சேர்க்கவேண்டும்; அம்மூன்றையும் தயிரில் சேர்க்கவேண்டும்; அந்நான்கை யும் பாலில் இருதயமந்திரத்தால் சேர்த்து, அதிலேயே குசோதகத்தையும் மூலமந்திரத்தால் சேர்க்கவேண்டும். பின்னர் பஞ்சப்பிரம மந்திரம் ஷடங்கமந்திரங்களால் அபிமந்திரணஞ் செய்து, அஸ்திர மந்திரத்தால் சம்ரக்ஷணமமும், கவச மந்திரத்தால், அவகுண்டனமும் செய்து, தேனுமுத்திரை காட்டி, கந்தம் புஷ்பங்களால் பூஜித்து, அஸ்திரமந்திரத்தால் தூபதீபங்காட்டி, மூலமந்திரத்தால் அபிமந்திரணஞ் செய்ய வேண்டும்.




## பஞ்சாமிருதம்

பஞ்சகவ்வியபூசைக்குக் கிழக்குப் பக்கத்தில் பஞ்சாமிருத பூசையைச் செய்தல் வேண்டும். நடு முதல் மேற்கு வரையுள்ள பாத்திரங்களில் பால், தயிர், நெய், தேன், சர்க்கரை என்னுமிவற்றை தனித்தனியே அரைபடி எடுத்து வைத்து அக்கினி திக்கில் வாழை, பலா, மா என்னும் பழங்களையும், ஈசான திக்கில் கந்தோதகத்தையும் வைத்து, அந்தந்தப் பாத்திரத்திலிருக்குக்கக் கூடியவற்றிற்கு முன்போல் அபிமந்திரணஞ் செய்ய வேண்டும். சர்க்கரை கோமயம் போல் ஜலத்துடனேயிருக்க வேண்டும். எல்லாவற்றையும் பஞ்சகவ்வியம் போல் சேர்க்க வேண்டும்.

எல்லாவற்றையும் சேர்க்கும் முறையாவது, பஞ்சகவ்வியத்துக்குப்போல் நெல் பரப்பிய தரையில் கிழக்கு முதலிய திக்குக்களிலும் நடுவிலும் ஐந்து கோஷ்டங்களையும், ஈசான திக்கில் எட்டுத்தளங்களையுடைய தாமரையையும் கீறி, சிவம், நியதி, காலம், வியக்தம், அவ்வியக்தம், சுமங்களை என்னும் பெயர்களால் நடு கிழக்கு முதலாக அந்த ஆறு கோஷ்டங்களையும் பூசித்து, அவற்றில் ஆறு பாத்திரங்களை அமிருதல், சோமம், வித்த இரத்தினோதகம், சுதாப்பிரீதம், சுரப்பிரீதம் என்ற பெயர்களால் பூசித்து, மேலே கூறியபடி முறையே நடு முதலிய தானங்களிலிருக்கும் பாத்திரங்களில் பஞ்சாமிருதங்களையும், ஈசான கோணத்திலிருக்கும் பாத்திரத்தில் இள நீரை (தேங்காய் ஜலத்தை) யும் வைத்து, அவற்றைப் பஞ்சகவ்வியம் குசோதகத்திற்குச் செய்ததைப் போன்று அபிமந்திரஞ் செய்து, சர்க்கரை முதலியவற்றைக் கோமயம் ஆகியவற்றைப் போல் பாலில் சேர்த்துக் குசோதகத்தை, பஞ்ச கவ்வியத்தில் சேர்த்தவாறே இளநீரையும் பஞ்சாமிருதத்தில் சேர்க்க வேண்டும்.



## அபிஷேக முறை

சிவசக்திப்பியாம் நம: என்று சொல்லிக்கொண்டு மூர்த்திக்கு லிங்க முத்திரையைக் காட்டி, ஆசன மூர்த்தி மூலமந்திரங்களால் பூஜித்து, தூப தீபஞ் சமர்ப்பித்த பின்னர் வெள்ளி, செம்பு, சங்கு,பசுவின் கொம்பு என்னுமிவற்றுள் ஏதாவது ஒன்றால் செய்யப்பெற்ற பாத்திரத்தால் தாரையாக நீர் அபிஷேகஞ் செய்ய வேண்டும்.



வாசனைத் தைலத்தால் (நல் எண்ணையால்) அல்லது, பசு நெய்யால் தைலக்காப்புச் (தைலாப்பியகம்) செய்து, அரிசி, மஞ்சள், நெல்லிவற்றல், அபிஷேகக்கூட்டு போன்ற மாப்பொடிகளால் சுத்தி அபிஷேகஞ் செய்ய வேண்டும்.

பின் சிறிது சூடுள்ள வெந்நீரால் அபிஷேகஞ் செய்து, சிரசில் புஷ்பத்தை வைத்துப் பஞ்சகவ்வியம், கலவாத பஞ்சாமிருதம், பழச்சாறு, கலந்த பஞ்சாமிருதம் ஆகியவற்றால், முறையே சிரசு, சிகை, நேத்திரம் என்னும் மந்திரங்களை உச்சரித்து தூபம், தீபம், புஷ்பம் என்பவற்றைச் சமர்ப்பித்து பின், அஸ்திர மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, மணியடித்து அபிஷேகஞ் செய்ய வேண்டும்.
இவ்வாறே பழ ஜலத்தால் (பழ ஜலம் என்பது, இள நீர், தோலுடன் கூடின மாதுளம்பழம், தோலில்லாத பலாப்பழம், கொய்யாப்பழம், சுரபுன்னைப்பழம், எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், வாழைப்பழம், மாம்பழம் என்பனவற்றுடன் கலந்த ஜலமாகும்) அபிஷேகஞ் செய்ய வேண்டும்.
இவ்வாறே பீஜோதக ஜலத்தால் (பீஜோதக ஜலம் என்பது, யவம், நீவாரம், நெல், பயறு, வெண்கடுகு, வாசனைத்திரவியம், சம்பாநெல் என்பனவற்றுடன் கலந்த நீராகும்)
அபிஷேகஞ் செய்ய வேண்டும்.பின்னர் மூலமந்திரத்திற்குரிய பீஜாக்கரத்தால் கந்தம், புஷ்பம், தூபம், தீபங்களைக்கொண்டு சமர்ப்பிக்க வேண்டும்.

பின் இரத்தினோத ஜலத்தால் (இரத்தினோத ஜலம் என்பது, ஸ்படிகம், நல்முத்து, மாணிக்கம், பவளம், கோமேதகம், புஷ்பராகம், கருடப்பச்சை, இந்திர நீலக்கல் என்பனவற்றுடன் கலந்த நீராகும்) அபிஷேகஞ் செய்ய வேண்டும்.பின்னர் உயிரெழுத்து, மெய்யெழுத்து மந்திரத்தால் புஷ்பம், கந்தம் முதலியவற்றால் அர்ச்சிக்க வேண்டும்.

பின் கந்தோதக ஜலத்தால் (கந்தோதக ஜலம் என்பது, சந்தனம், அகில், கஸ்தூரி, குங்குமப்பூ, கற்பூரம், மனோசிலை, ஏலம், கீழ்காய் நெல்லி, தக்கோலம், இலவங்கம், இலாமிச்சம்வேர், செண்பக மொட்டுப்பொடி என்னுமிவற்றுடன் கலந்த நீராகும்) அபிஷேகஞ் செய்ய வேண்டும்.பின்னர், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியமென்னுமிவற்றை நாமமந்திரத்தால் அர்ச்சிக்க வேண்டும்.

பின் புஷ்போதக ஜலத்தால் (புஷ்போதக ஜலம் என்பது சண்பகம், மல்லிகை, தாழம்பூ, பாதிரி, முல்லை, சுரபுன்னை, நந்தியாவர்த்தம் ஜாதி (பிச்சி) மந்தாரம், அலரி, தாமரை, நீலோத்பலம், கிரிமல்லிகை என்னுமிவற்றுடன் கூடினதாயும், வெட்டிவேர் முதலிய வேருடன் கூடினதாயும் உள்ள நீராகும்) அபிஷேகஞ் செய்ய வேண்டும். பின்னர், சிவமந்திரத்தால் கந்தம், புஷ்பம், தூபம், தீபம் என்னுமிவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.


பின் சிவநாம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே சுத்தமான அன்னத்தால் லிங்கத்தின்மீது அபிஷேகஞ்செய்து, லிங்கத்தின் நாலுபக்கத்திலுமுள்ள அந்த அன்னத்தை லிங்கத்தின் சொரூபம் போல் செய்து கந்தம், புஷ்பம், தூபம், தீபம், தாம்பூலம் என்பனவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

அன்னத்தை நீக்கியபின், மூல-பீஜா- அட்சரத்தை நியாசஞ்செய்து, லிங்கத்தின் சிரசில் கந்தம், புஷ்பம் சமர்ப்பித்து பஞ்சப்பிரம்ம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே தேனு-முத்திரை செய்து, தூபம், தீபங்களை ஆராதிக்க வேண்டும்



பின்னர், அருகு, எள், அக்ஷதைகளைச் சமர்ப்பித்து கந்தம், புஷ்பம், தூபம், தீபங்களை ஆராதிக்க வேண்டும். அதன்பின் இளநீர் கருப்பஞ்சாறு, விபூதி, சந்தனம், குங்குமம், சங்கு ஜலம், முதலியவற்றால் அபிஷேகஞ் செய்ய வேண்டும்.


அதன்பின்னர் தாராபிஷேகஞ் செய்ய வேண்டும். அந்ததாரையானது நூற்று ஒன்பது துவாரங் களின் ஊடாக (சற்சதுரமாக இருக்கும் தாராபிஷேக பாத்திரத்தில் நவகோஷ்டம் உண்டாக்கி, நடுக்கோஷ்டத்தின் மத்தியில் ஒரு துவாரமும், நடுத்துவாரத்தைச் சுற்றி, எட்டுத் துவாரங்களும், நடுக்கோஷ்டத்தின் ரேகையில் மகா திக்குகளான நான்கு திக்குகளிலும், நான்கு துவாரங்களும், கிழக்கு முதலுள்ள எட்டுக் கோஷ்டங்களில் தனித்தனி பன்னிரண்டு துவாரங்களும் இருக்க வேண்டும். ஆகவே மொத்தம் நூற்று ஒன்பது துவாரமுண்டு) வரவேண்டும். தாராபிஷேக பாத்திரம் வெள்ளி, செம்பு என்னுமிவற்றிலொன்றால் வட்டமாகவோ சற்சதுரமாகவோ அமைந்திருக்க வேண்டும்.



குறிப்பு; பாத்திரம் வட்டமாயிருக்குமாயின் எட்டுத் தளமுடைய தாமரையை வரைந்து, கர்ணிகையின் நடுவிலும், அதைச் சுற்றியும் ஒன்பது துவாரங்களும், ஒவ்வொரு தளந்தோறும் பன்னிரண்டு துவாரங்களும், தளங்களுக்கு வெளியிலுள்ள வட்டத்திலிருக்கும் மகாதிக்குகளில் நான்கு துவாரங்களுமாக உத்தம பாத்திரத்திற்குத் துவாரங்கள் செய்யவேண்டும்.


## புஷ்பவகை

அதன் பின் புஷ்பங்களால் நாமமந்திர அர்ச்சனைப் பூஜைசெய்ய வேண்டும். கீழே விழுந்த மொட்டுகள் புஷ்பங்கள், சிதறிப்போனதும், நுகரப்பெற்றதும், துஷ்டஜந்துக்களினால் ஸ்பரிசிக்கப்பெற்றதும், சிலந்திப் பூச்சி (எட்டுக்காற் பூச்சி) யின் நூலால் சுற்றப்பெற்றதும், பழையதும், பூஜைக்குரியவை அல்ல. நன்கு சுத்தஞ் செய்யப்பட்டனவாயும், இலைப்பிடிப்பு நீக்கப்பட்டனவாயுமுள்ள மலர்களால் மூலமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு அர்ச்சிக்கவேண்டும்.





பூஜைக்குரிய புஷ்பங்கள் வருமாறு :-








அலரி, அரலி, ஆயிரம் இதழுடைய தாமரை, நூறு இதழுடையதாமரை, வெண்தாமரை, செந்தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், சம்பங்கி, கனகாம்பரம், மனோரஞ்சிதம், மாதுளை, பூமாதுளை, செவ்வந்தி, திருக்கொன்றை, நாகலிங்கம், தென்னை, புன்னை, பூவரசு, பாரிஜாதம், சண்பகம், சிறுசண்பகம், தும்பை, பெருந்தும்பை, கொன்றை, அசோகம், சுரபுன்னை, மந்தாரம், மருக்கொழுந்து, ஊமத்தை, நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், எருக்கு, வெள்ளெருக்கு, மகிழம், மருதூணி, நாகம், வெள்ளைலொத்தி, பலாசம், பாடலி, கர்ணிகாரம், கும்மட்டி, மருதம், மயிற்கொன்றை, தேவதாரு, முல்லை, பத்ரா, அபராஜிதம், குசும்பம், குங்குமம், மலைமல்லிகை, தருப்பை, நாயுருவி, கையாந்தரை, கமுகு, சரளம், மலையத்தி, மலைப்பூ, கடம்பம், மா, இலுப்பை, ஹேமாகுலி, குன்றி, நிலப்பனை, வேஜிகை, ஜாதிமல்லிகை, மல்லிகை, பட்டி, மாலதி, ரித்தி, நொச்சி, விஷ்ணுகிராந்தி, வெள்ளை விஷ்ணுகிராந்தி, வாழை, தாழை, நன்னாரி, தேவதாளம், த்விகண்டி, கிரந்தபர்ணி,வில்வம், கந்தபத்ரிகா, கொக்குமந்தாரை, வன்னி, சங்கம், கண்டங்கத்திரி, சதபத்ரா, மிளகு, நொச்சி, துளசி, கருந்துளசி, செந்துளசி, இந்திரவல்லி, கரும்பு, விஜயம், கதலி, ரித்தி (ஓஷதி), சகதேவி, நாக தந்தி, பாதிரி, மகிழம், இலுப்பை, நாகம், சூரியாவர்த்தம், சிங்க கேசரம், நாக கேசரம், மகாபத்திரம், செவ்வரத்தை, கடம்பு, புன்னாகம், வேஜிகம், பலகர்ணி, பத்ராமுஸலீ, பச்சிலை, ஜாதி மல்லிகை, ரோஜா பவள மல்லிகை, பிச்சி மல்லிகை,லாந்தா மல்லிகை செவ்வரத்தம் (ஜவாபுஷ்பம்) மகிழம் என்னும் தாவரங்களின் பூக்களாம். அர்த்தராத்தியில் மாத்திரம் தாழம்பூவை உபயோகிக்கலாம் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.



ஏழுநாட்களில் விருத்தியடைந்த வால்நெல், கோதுமை, நீவாரம், நெல், மூங்கிலரிசி, மஞ்சாடி, பயறு, மொச்சை, இலாமிச்சை, உளுந்து என்னுமிவற்றின் முளைகளும் பூவுக்கு ஒப்பாகும்.



ஒரே வர்ணமுடைய புஷ்பங்களால் தனித்தனியாகக் கட்டப்பெற்ற மாலைகள், அநேக (நிற) வர்ணமுடைய புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலைகள், இலையும், பூவும் கலந்து கட்டப்பட்ட மாலைகள், இலைகளால் தனித்தனியாகக் கட்டப்பெற்ற மாலைகள் பூஜைக்கு மிகவுஞ் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

**பூஜைக்கு மிகச்சிறந்தவை என ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பத்திரங்கள் (இலைகள்) வருமாறு:**

வில்வம், துளசி, கருந்துளசி, தருப்பை, அறுகு, நாயுருவி, அலரி, நந்தியாவர்த்தம், வன்னி, சிறுகுறுஞ்சிக்கற்றாளை, தாதகி (வாசனையுள்ள ஒரு செடியின் இலை), விஷ்ணுக்கிராந்தி, தேவதாரு, மகாபத்திர விருக்ஷம், ஜாதி, நாவல், இலந்தை, உதும்பரம், மா, புரசு, தத்கோலம், சிற்றேலம், கிரிகர்ணிகை, உத்திரவர்ணி, ரோஜா, குருவேர், ஊமத்தை, மருவகம், தும்பை, நொச்சி, கங்கங்குப்பி, நெரிஞ்சில், மகிழம், கொன்றை யென்னும் இவற்றின் பத்திரங்களே(இலை களே) பூஜைக்கு மிகவுஞ் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

வில்வம், துளசி,நீலோற்பலம், அலரி, கிரிமல்லிகை, புரசு, கொக்குமந்தாரை என்னும் பூக்களுக்கும், பத்திரங்களுக்கும், நிர்மாலிய தோஷம் கிடையாது.

**ருதுகளுக்கு (இரு மாதங்கள்சேர்ந்த காலம்) என ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பூஜைக்குரிய புஷ்பங்கள்:**

**வசந்தருது**வாகிய ***சித்திரை, வைகாசி*** மாதங்களில் சிவபெருமானை வில்வம், கடம்பம், செண்பகம், செங்கழுநீர், புன்னாகம், தருப்பை, கண்டங்கத்தரி என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

**கிரீஷ்மருது**வாகிய ***ஆனி, ஆடி*** மாதங்களில் சிவபெருமானை பாடலிப் புஷ்பம், மல்லிகைப் புஷ்பம், நூறு இதழ்களையுடைய தாமரைப் புஷ்பம் என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.




**வருஷருது**வாகிய ***ஆவணி, புரட்டாசி*** மாதங்களில் சிவபெருமானை வில்வம், தாமரை, மல்லிகை என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

**சரத்ருது**வாகிய ***ஐப்பதி, கார்த்திகை*** மாதங்களில் சிவபெருமானை ஊமத்தை, செங்கழுநீர், சுஜாதம், நீலோற்பலம் என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

**ஹேமந்தருது**வான ***மார்கழி, தை*** மாதங்களிற் சிவபெருமானை அலரி, சுஜாதம், நீலோற்பலம் என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

**சிசிரருது**வாகிய ***மாசி, பங்குனி*** மாதங்களில் சிவபெருமானை கர்ணிகாரப் புஷ்பம் என்னும் இந்தப் புஷ்பங்களால் அருச்சனை செய்யின் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.



**மாதங்களுக்கு என ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பூஜைக்குரிய புஷ்பங்கள்;**

சித்திரை மாதம் - சண்பகம், வைகாசி மாதம் - பாடலம், ஆனி மாதம் -எருக்கு, ஆடி மாதம் - வில்வம், ஆவணி மாதம் - நாயுருவி, புரட்டாசி மாதம் - தும்பை மாதம், ஐப்பசி மாதம் - நீலோற்பலம், கார்த்திகை மாதம் - தாமரை, மார்கழி மாதம் - கொன்றை, தை மாதம் - கண்டங்கத்தரி, மாசி மாதம் - வியாக்கிரம், பங்குனி மாதம் - வன்னி என்னும் இந்தப் புஷ்பங்களால் அர்ச்சனை செய்தால் சிறந்தது எனவும் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.
எந்த மரங்களின் பூக்கள் மிகவுஞ் சிறந்தனவாகக் கூறப்பட்டிருக்கின்றனவோ, அந்த மரங்களின் இலைகளும் மிகவுஞ் சிறந்த பத்திரங்களாகும்.

**பூஜாகாலங்களுக்கு என ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பூஜைக்குரிய புஷ்பங்கள்;**

**உஷத்காலப் பூஜை**-நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெள்ளெருக்கு, வெண்டாமரை, புரசு, புன்னாகம், சிறு சண்பகம் என்னும் புஷ்பங்கள் உஷத்காலப் பூஜையில் மிகவுஞ் சிறந்தன எனவும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

**காலை சந்திப் பூஜை**- பட்டி, சிவந்த அகஸ்தியம், மகிழம், ரித்தி (ஓஷதி), திவிகண்டி, வேஜிகை, பாடலம், அசோகம், கதலி, சங்கினி என்னும் புஷ்பங்கள் **காலை சந்திப்** பூஜையில் மிகவுஞ் சிறந்தன எனவும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.



**உச்சிக்** காலப் பூஜை-தும்பை, அலரி, கொன்றை, ஊமத்தம், வியாக்கிரம், கண்டங்கத்தரி, பாடலம், தாமரை, நீலோற்பலம், செண்பகம், குரண்டமென்னும் இவற்றின் பூக்கள் உச்சிக் காலப் பூஜையில் மிகவுஞ் சிறந்தன என்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.


**சாயங்காலப்** பூஜை-சண்பகம், ஊமத்தம், சிறுசண்பகம், மல்லிகை, வேஜிகம், பலகர்ணி, சகபத்ரை, பத்ராமுஸலீ, பச்சிலை, வன்னி, சங்கம் என்னுமிவற்றின் பூக்களும், வாசனையுள்ள பத்திரங்களும் சாயங்காலப் பூஜையில் மிகவுஞ் சிறந்தன என்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

**இரண்டாங்காலப் பூஜை**-வில்வம், ஜாதி, நீலோற்பலம், கடம்பம், ரோஜா, தாழை, கமுகு, புன்னாகம், தந்தி என்னும் இவற்றின் பூக்களும், இரண்டாங்காலப் பூஜையில் மிகவுஞ் சிறந்தன என்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

**அர்த்தஜாமப்** (ராத்திரி) பூஜை-ஊமத்தை, தா ழை, குருவேர், மனோரஞ்சிதம், மாதுளை, பூமாதுளை, செவ்வந்தி, திருக்கொன்றை, நாகலிங்கம், இவற்றின் பூக்களும், அவை அர்த்தஜாமப் (ராத்திரி) பூஜையில் மிகவுஞ் சிறந்தன என்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

**பூஜைக்கு மிகச்சிறந்தவை என ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பழங்கள் வருமாறு:**

பழவகைகளுள் எலுமிச்சை, மாதுளை, நெல்லி, நாரத்தை, மா, கொய்யா, தோலில்லாத பலா, விளா, வாழை, என்னும் பழங்கள் அர்ச்சினைக்கு மிகச் சிறந்தவையாகும். பழங்களுக்கு பதிலாக அட்சதை,எள், அரிசி, கடுகு என்னுமிவற்றால் அர்ச்சிக்கவேண்டும்



## The basic teachings of the Upanishads - Six Mahavakyas

The basic teachings of the Upanishads are summed up in six great sayings (**Mahavakyas**).

1. "I am Brahman" (***Aham Brahmasmi***). This states the identity of the inmost consciousness of the individual with that of the supreme Divine. The ultimate truth of Vedic knowledge is not that some great savior is God or the Lord or that such and such a God or name and form of God is the supreme. It is not the worship of a person, book, image or idea. It is not even the worship of God. The Upanishads say that whatever we worship as truth apart from ourselves destroys us. They teach that our own Self is the true Divinity, that it is the presence of the absolute within our heart and the entire universe.
2. "The Self is Brahman" (***Ayam Atma Brahma***). This also states the identity of the soul with the Absolute but in a more objective and less direct manner. Not only is our Self the Divine. It is the same Self in all beings that is the same Absolute truth.
3. "That thou art" (***Tat tvam asi***). Whatever we see or think about we are that. Not only is the I That, the You is also That. We are that ultimate I and Thou in all. The consciousness in the other is also the Divine.
4. "Intelligence is Brahman" (***Prajnanam Brahma***). Our discernment of truth is the truth itself. It indicates that the Divine intelligence is present within us and has the power to return us to the Divine. Our inmost intelligence is that supreme intelligence through which we can merge into the Absolute.
5. "The Universe is Brahman" (***Sarvam Khalvidam Brahma***). The entire universe is the Divine, which includes our self. The Divine is not only the consciousness principle in you and I, it is also the being principle in all things. It is the ultimate object as well as the inmost subject in all beings. It is one and all and all in one.
6. "He am I" (***So'ham***). This shows the identity of the self with the Divine Lord inherent within the natural movement of our breath. "So" is the natural sound of inhalation, "ham" of exhalation.
   These are statements of the identity of the individual consciousness with the Absolute or Divine reality. They all derive from and merge into AUM, the divine word of "I am all".

### The most important beliefs in Hindu religion

The most important beliefs in Hindu religion are as follows:

i. Hinduism believes in one and all pervasive Supreme Being who is both transcendent and immanent.
ii. Hinduism believes that the universe undergoes endless cycles of creation, preservation and dissolution.
iii. Hinduism believes in karma, the law of cause and effect by which each individual creates his own destiny by his thoughts, words and deeds.
iv. Hinduism believes that all life is sacred and pure to be loved and respected.
v. Hinduism believes that our soul reincarnates through many births until it attains moksha- liberation from the cycles of birth and rebirth.
vi. Hinduism believes in ahimsa and dharma-doing one's duties.

### The basic tenets of Hindu religion

The basic tenets or the code of belief of Hindu religion are follows:

i. Sathya - Follow truth, do not ever lie
ii. Ahimsa - Follow nonviolence always
iii. Brahmacharya - do not overindulge
iv. Astheya - do not steal, do not acquire anything that are not yours
v. Aparigraha – Be non-corrupted in life
vi. Shaucha - Be clean always
vii. Santosha - Be satisfied with what you possess
viii. Tapas - Be self-disciplined
ix. Svadhyaya - Learn the scriptures whenever possible
x. Ishvara Pranidhana - surrender submit yourself to God

## Quatations

"All that god does shall win our praise.We magnifyHis name with hymns,seeking boons from the Mighty".

-Rig Veda

"I'll not sell you not for a thousand or ten thousand pieces!O Indra,you are more to me than a father.I count a brother naught compared to you.You and a mother,OBountiful,vie with each other in generous giving and in bestowal of joy".

-Rig Veda

"A part of Infinite Consciousness becomes our own finite consciousness,wth powers of discrimination and definition and with false conceptions.He is,in truth,Prajapathi and Visva, the Source of Creation and the Universal in us all. This Spirit is consciouness and gives consciousness to the body.He is the driver of the chariot".

-Yajur Veda

"He who dwells in the light,yet is other than the light,whom the light does not know,whose body is the light,who controls the light from within-He is the atman within you".

-Yajur Veda

"As humgry children here bolow sit round about their mother,even so all beings expectantly sit around agnihotra".

-Sama Veda

"Now,that golden Person who is seen within the sun has a golden beard and golden hair.He is exceedingly brilliant all,even to the fingernail tips.His eyes are even as a Kapyasa lotus flower.His name is high.He is raised high above all evils.Verily,he who knows this rises high above all evils".

-Sama Veda

"The rites of oblation,O lovers of truth,which the sages divined from the sacred verses,were variously expounded in the threefold Veda.Perform them with constant care.This is your path to the world of holy action".

-Atharva Veda

"In whose one limb all the Godsthree and thirty in number, are affixed-tell me of that Support-who may He be?"

-Atharva Veda

"Recognation of the world as the manifestation of Sakti is worship of Sakti.Pure knowlrdge, unrelated to objectes, is absolute".

-Devikalottara Agama

"He (Atman) is myself within the heart, smaller than a grain of rice or a barley corn,or a grain of millet:this is myself within my heart,greater than the earth,greater than the atmosphere,greater than the sky,greater than all these worlds".

-Chandogya Upanishad.111,14:3-5